## DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

**SC.No. 139/2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 10 | நாள் | : | 03.03.2026 |
| பெயர் | : | ராஜேந்திரன் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 03rd day of March 2026.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று சங்கரன்கோவிலில் வசித்து வருகிறேன். கடந்த 28.09.2016 முதல் சங்கரன்கோவில் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்ததேன். எனக்கு முன்பு மேற்படி உட்கோட்டத்தில் காவல் துணை கண்காணிப்பாளராக திரு.லட்சுமணன் என்பவர் பணிபுரிந்து வந்துள்ளார் மேற்படி காவல் துணை கண்காணிப்பாளர் பணிபுரிந்த காலத்தில் சங்கரன்கோவில் நகர் காவல் நிலைய கு.எண்.476/2015 வழக்கின் சட்டப் பிரிவுகள் 147, 148, 323, 336, 153(A), 506, IPC r/w. 3(x) SC / ST (PREVENTION OF ATROCITIES) ACT, ன்படியான வழக்கை மேற்படி காவல் உதவி ஆய்வாளர் அன்பழகன் என்பவர் சங்கரன்கோவில் காவல் நிலைய

கு.எண்.476/2015 என்று பதிவு செய்து விசாரணைக்காக லட்சுமணன் பார்வைக்கு வைத்துள்ளார். அவர் பதிவு செய்த முதல் தகவலறிக்கை அ.சா.ஆ.3 ஆகும். மேலும் விசாரணை அலுவலரை நியமிக்கவும், மாவட்ட காவல் அலுவலகத்திற்கு தகவல் தெரிவித்து அதனடிப்படையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விசாரணை அலுவலரை நியமித்து உத்தரவிட்டுள்ளார். அவர் பிறப்பித்த உத்தரவு நகல் அ.சா.ஆ. 4 ஆகும். மேற்படி காவல் துணை கண்காணிப்பாளர் முதல் நிலை விசாரணை மேற்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சரவணன், திருமுருகன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயாரித்துள்ளார். அவர் தயாரித்த வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும். பின்னர் கண்ணுற்ற சாட்சிகளையும், காயம்பட்ட காளிராஜ், மாரியப்பன், குணசேகரன் ஆகியோர்களையும் முதல் தகவலறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் அன்பழகனையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அதன்பின்னர் 01.10.2016 ம் தேதி மேற்படி வழக்கினை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் செயல்முறை ஆணை எண்.C .No.C4/pcr/132-1/2015, dated 01.10.2016 உத்தரவுப்படி நான் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். எனக்கு அளித்த அனுமதிக் கடிதம் அ.சா.ஆ.6 ஆகும். நான் மீண்டும் சம்பவ இடத்தை பார்வையிட்டும் சாட்சிகளை விசாரித்தும் அவர்கள் முந்தைய புலனாய்வு அலுவலர் மேற்கொண்ட சங்கதிகளையே என்னிடமும் கூறினார்கள். புகார்தாரர் காளிராஜ் என்னிடம் விசாரணையின்போது எதிரிகள் சுவாமி சிலைகள் மீது செருப்பு வீசவில்லை என்றும் சாட்சிகள் மாரியப்பன்,

குணசேகரன் ஆகியோரும் என்னுடைய விசாரணையின்போது சுவாமி சிலைகள் மீது செருப்புகளை வீசி அவமானப்படுத்தியதாக கூறவில்லை எனவே சட்டப்பிரிவுகளை 153(A) இதச பிரிவை நீக்கி சட்ட மாறுதல் அறிக்கை அனுப்பி வைத்தேன் அந்த அறிக்கை அ.சா.ஆ.7 ஆகும். பின்னர் இந்த வழக்கின் புகார்தாரரின் சாதிச் சான்றிதழ் கேட்டு சங்கரன்கோவில் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு விண்ணப்பம் கொடுத்தேன். வழக்கின் எதிரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட வாகனங்கள் குறித்து விசாரணை செய்தபோது சம்பவத்தின்போது பொதுச் சொத்துக்கள் சேதப்படுத்தியதாக கிராம உதவியாளர் கொடுத்த புகாரின் அடிப்படையில் மேற்படி காவல் நிலைய கு.எண்.475/2015 வழக்கின் சம்பந்தப்பட்ட எதிரிகளான ஆஜர் எதிரிகளை மேற்படி வழக்கின் காவல் ஆய்வாளர் கைது செய்து நிலையத்தில் வைத்திருந்த நிலையில் இவ்வழக்கிலும் அவர்கள் தொடர்புடையவர்கள் என்பதால் முறைப்படி கைதுக்கான காரணம் தெரிவிக்கப்பட்டு கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட முத்துப்பாண்டியன் இறந்துபோனார். மற்ற எதிரிகளுக்கு சாதிச்சான்றிதழ் கோரி கோவில்பட்டி வட்டாட்சியர் அலுவலகத்திற்கும், ஒட்டப்பிடாரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கும், வெம்பக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்திற்கும் வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்தேன். முறையே புகார்தாரருக்கும், எதிரிகளுக்கும் சாதிச் சான்று கிடைக்கப் பெற்ற பின்னர் புகார்தாரர் காளிராஜிற்கு வழங்கிய வட்டாட்சியர் சிவக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு

செய்தேன். பின்னர் எதிரிகளுக்கு சாதிச்சான்றிதழ் வழங்கிய கோவில்பட்டி துணை வட்டாட்சியர் நாகராஜன், ஒட்டப்பிடாரம் துணை வட்டாட்சியர் இசக்கிராஜா, வெம்பக்கோட்டை வட்டாட்சியர் மனோகரன் ஆகியோர்களை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். புகார்தாரருக்கு வட்டாட்சியர் வழங்கிய சாதிச்சான்றிதழ் அ.சா.ஆ.8 ஆகும். எதிரிகள் ராமச்சந்திரன், மணிகண்டன் என்ற ஆறுமுகப் பாண்டியன், கண்ணன், கனகசபாபதி, ஜமின், ஆகியோர்களின் சாதிச்சான்றிதழ் அ.சா.ஆ.9 முதல் 13 ஆகும். கருத்தப்பாண்டியனின் சாதிச்சான்றிதழ் அ.சா.ஆ.14 ஆகும். ரமேஷ்குமாரின் சாதிச்சான்றிதழ் அ.சா.ஆ.15 ஆகும். பின்னர் நான் சேகரித்த சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் மாறுதல் செய்யப்பட்ட சட்டப்பிரிவுகளின் அடிப்படையில் எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய போதிய முகாந்திரம் காணப்பட்டதால் எதிரிகள் மீது 10.11.2017 அன்று குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன். மாரியப்பன், குருவய்யா ஆகிய இருவரும் என்னுடைய விசாரணையில் சம்பவத்தின்போது காயம்பட்டதாக மாரியப்பனும், குருவய்யா சம்பவம் தனக்கு தெரியும் என்று கூறியதைத்தான் வாக்குமூலமாக பதிவு செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.03.03 17:07:30 +0530